**ஆகஸ்ட் – 15**

# TNPSC துளிகள்

- அலெஜான்ட்ரோ கியாமேட்டி என்பவர் கவுதமாலா நாட்டின் புதிய ஜனாதிபதியாக வென்றுள்ளார். இவர் சாண்ட்ரா டோரஸ் என்பவருக்கு எதிராக தேர்தலின் இரண்டாவது சுற்றில் வெற்றி பெற்றார்.
- 2021ம் ஆண்டு முதல் யானைத் தந்தங்களுக்கான உள்நாட்டு விற்பனை மீது தடை விதிக்கப் போவதாக சிங்கப்பூர் அறிவித்துள்ளது.
- உலக சுகாதார நிறுவனத்தின் சமீபத்திய அறிக்கையின்படி, WHO தெற்கு-கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் தட்டம்மையை ஒழிப்பதிலும் ரூபெல்லாவைத் தடுப்பதிலும் பூடான், மாலத் தீவுகள் மற்றும் திமோர்-லெஸ்தி நாடுகளுக்குப் பிறகு இலங்கை நான்காவது நாடாக இருக்கின்றது.
- மேற்கு இந்தியத் தீவுகளுக்கு எதிரான சமீபத்திய ஒருநாள் போட்டியில் விராட் கோலி தனது 42 சதத்தைப் பூர்த்தி செய்து சவுரவ் கங்குலிக்கு (11363) அடுத்தபடியாக இரண்டாவது அதிகபட்ச இந்திய ரன் குவிப்பாளராக உருவெடுத்துள்ளார். தற்போது கோலி சச்சின் டெண்டுல்கரை அடுத்து உள்ளார்.
- முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் முதல்முறையாக இராஜஸ்தான் மாநிலத்திலிருந்து மாநிலங்களவைக்கு நடைபெற இருக்கும் இடைத் தேர்தலில் காங்கிரஸின் வேட்பாளராக மனுத் தாக்கல் செய்தார். 1991 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையில் தொடர்ந்து ஐந்து முறையாக அவர் அசாம் மாநிலத்திலிருந்து மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார்.

# தேசியச் செய்திகள்

## திவால் மற்றும் நொடித்தல் குறியீடு (திருத்த) மசோதா, 2019

- இந்த மசோதா 2016 ஆம் ஆண்டின் திவால் மற்றும் நொடித்தல் குறியீட்டில் திருத்தம் செய்கின்றது.
- திவால் என்பது தனிநபர்களும் நிறுவனங்களும் தங்களின் நிலுவையிலிருக்கும் கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் இருக்கும் ஒரு சூழ்நிலையாகும்.
- இந்தக் குறியீடு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் மத்தியில் இருக்கும் திவால் நிலைமையை சரிசெய்ய ஒரு குறிப்பிட்ட கால அளவிலான செயல்முறையை அளிக்கின்றது.

### *முக்கியத் திருத்தங்கள்*

- இந்த குறியீட்டின் கீழ், திவால் தீர்வு நடைமுறையை ஆரம்பிப்பதற்காக ஒரு கடன் பெற்றவர் தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தின் முன்பாக ஒரு விண்ணப்பத்தைத் தாக்கல் செய்யலாம்.
- இந்த தீர்ப்பாயம் 14 நாட்களுக்கு உள்ளாக கடனைத் திருப்பி செலுத்தத் தவறிய நிலையைக் கண்டறிய வேண்டும்.
- அதன்பின் கடன்நிதி பெற்றவர்கள் உள்ளடங்கிய குழு ஒன்று திவால் தீர்வு நடைமுறை தொடர்பாக முடிவுகளை எடுப்பதற்காக அமைக்கப்படும்.
- இந்த குழு திவால் நிபுணர் ஒருவரை நியமிக்கும். அவர் திவால் சரியாக்கல் திட்டம் ஒன்றை அக்குழுவிடம் சமர்ப்பிப்பார்.
- பின் அந்தக் குழு அத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். மேலும் 180

நாட்களுக்கு உள்ளாக அந்த திவால் தீர்வு நடைமுறை முடிக்கப்பட்டாக வேண்டும்.


- ஒருவேளை தீர்வு நடைமுறை அக்குழுவால் நிராகரிக்கப்பட்டால் கடன் வாங்கியவர் சொத்துக்களைப் பிரித்து விற்க முயல்வார்.
- இந்தத் தீர்வு நடைமுறை ஒருவேளை தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் ஒப்புதலளித்தால் மீண்டும் ஒரு 90 நாட்கள் காலகட்டத்திற்கு நீட்டிக்கப்படும்.
- இந்தக் குறியீடு திவால் தீர்வு நடைமுறை 180 நாட்களுக்குள்ளாகவும் 90 நாட்கள் அளவிற்கு ஒரு நீட்டிக்கப்பட்ட காலகட்டத்திற்கு உள்ளாகவும் முடிக்கப்பட வேண்டுமென்றும் கூறுகின்றது.
- இந்த மசோதா தற்போது திவால் தீர்வு நடைமுறை 330 நாட்களுக்கு உள்ளாக தீர்க்கப்பட வேண்டுமென்று கூறுகின்றது.

***சுருக்கம்***

- இந்த மசோதா மூன்று முக்கிய விவகாரங்கள் மீது கவனம் செலுத்துகின்றது.
- முதலாவதாக இது கால வரம்புகள் தொடர்பான விதிமுறைகளைப் பலப்படுத்துகின்றது.
- இரண்டாவது இது எந்தவொரு தீர்வு நடைமுறையிலும் குறைந்தபட்ச நஷ்ட ஈடுகளைச் செயல்பாட்டிலிருக்கும் கடன் பெற்றவர்களுக்கு குறிப்பிடுகின்றது.
- மூன்றாவதாக இது கடன் பெறுபவர்கள் குழுவின் பிரதிநிதி (வீடு வாங்குபவர்) எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்பதையும் குறிப்பிடுகின்றது.

## பொது வளாகங்கள் (அனுமதி பெறாது குடியிருப்பாளர்களின் வெளியேற்றம்) திருத்த மசோதா 2019

- இது வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரியால் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டது.
- இந்த மசோதா 1971ம் ஆண்டின் பொது வளாகங்கள் (அனுமதி பெறாத குடியிருப்பாளர்களின் வெளியேற்றம்) சட்டத்தில் திருத்தம் செய்கின்றது.
- இம்மசோதா ஒரு நபரால் பொது வளாகங்களை ஆக்கிரமித்தல் என்பது அவ்வாறான ஆக்கிரம்பிப்பிற்கான உரிமத்தை வழங்குவதன் மூலம் “குடியிருப்பிற்காகத் தங்குவதற்கான வசதி” என்று வரையறுக்கின்றது.
- இம்மசோதா குடியிருப்பு வளாகங்களிலிருந்து வெளியேற்றப்படுவதற்கான நடைமுறையைக் கொண்டிருக்கும் ஒரு விதியை சேர்க்கின்றது.
- ஒரு வேளை குடியிருப்பு வளாகத்தில் அனுமதி பெறாமல் தங்கிய நபர் ஒருவர் சொத்து அதிகாரியால் வெளியிடப்பட்ட வெளியேற்ற ஆணையை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்தால், அவர் அவ்வாறு அங்கு குடியிருக்கும் ஒவ்வொரு மாதத்திற்கும் இழப்புகளுக்கான கட்டணத்தைச் செலுத்த வேண்டியிருக்கும்.




## மோட்டார் வாகனங்கள் (திருத்தம்) மசோதா, 2019

- இது தரைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சலைத் துறை அமைச்சர் நிதின் கட்காரியால் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டது.
- இந்த மசோதா 1988ம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டத்தை சாலைப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு திருத்தம் செய்திட எண்ணுகின்றது.
- இந்தச் சட்டம் மோட்டார் வாகனங்கள் தொடர்பான உரிமங்கள் மற்றும் அனுமதிகள், மோட்டார் வாகனங்களுக்கான தர நிர்ணயங்கள், இவ்விதிகளை மீறுவதில் அபாராதங்கள் ஆகியவற்றிற்காக அனுமதியை அளிக்கின்றது.

*முக்கிய மாற்றங்கள்*

- மத்திய அரசாங்கம் தங்க நேரத்தின் போது சாலை விபத்தில் பலியானவர்களுக்கு கட்டணமில்லா சிகிச்சைக்காக ஒரு திட்டம் ஒன்றை வடிவமைக்கும்.
- பயங்கரமான காயத்திற்குப் பிறகு, அதன் காரணமாக மரணம் ஏற்படும் சம்பவத்தைத் தடுப்பதற்காக விபத்து நடந்த பிறகு மிக அதிகபட்சமான செயலாக கருதப்படுகின்ற சரியான மருத்துவச் சிகிச்சையை கொடுக்க முயல்கின்ற ஒரு மணி நேரத்தைத் தங்க நேரமாக இந்த மசோதா கருதுகின்றது.
- இந்த மசோதா வாகனத்தால் தாக்கி விட்டு ஓடிப் போவோர் தொடர்புடைய வழக்குகளுக்காகக் குறைந்த நிவாரணத் தொகையைப் பின்வருமாறு அதிகரிக்கின்றது.
    - ஒருவேளை மரணித்தால் 25000 ரூபாயிலிருந்து இரண்டு லட்சம் வரையில்
    - ஒருவேளை மிக மோசமான காயம் ஏற்பட்டால் 12500 ரூபாயிலிருந்து 50,000 ரூபாய் வரையில்.
- இந்த மசோதா இந்தியாவில் சாலையை உபயோகிக்கும் அனைத்துப் பயனாளிகளுக்கும் கட்டாயக் காப்பீட்டு சேவை அளிக்கும் வகையில் ஒரு மோட்டார் வாகன விபத்து நிதியை உருவாக்கிட மத்திய அரசிற்கு அனுமதி அளிக்கின்றது.
- இந்த மசோதா ஒரு விபத்து நிகழும் சமயத்தில் அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர மருத்துவ அல்லது மருத்துவமல்லாத உதவியை அளிக்கும் நபர்களை ஒரு நல்ல

ரட்சகர் என்று வரையறுக்கின்றது.

❖ ஒரு வேளை வாகனத்தில் உள்ள ஒரு குறைபாடு சுற்றுச்சூழலிற்கோ, வாகன ஓட்டிக்கோ அல்லது மற்ற சாலைப் பயனாளிக்கோ தீங்கு விளைவித்தால் மத்திய அரசானது அந்த வகை மோட்டார் வாகனங்களைத் திரும்பப் பெறுவதற்கு ஆணையிட இந்த மசோதா அனுமதி அளிக்கின்றது.

❖ திரும்பிப் பெறப்பட்ட வாகனத்தின் உற்பத்தியாளர்கள் கட்டாயம்

  ○ அவ்வாகனத்தின் மொத்த விலையை வாங்கியவர்களுக்கு திருப்பி அளித்திடவும்

  ○ அதே வாகனத்தைப் போன்ற அல்லது அதை விட சிறந்த மாதிரியைக் கொண்ட மற்றொரு வாகனத்துடன் குறைபாடு உடைய வாகனத்தை மாற்றித் தரவும் நேரிடும்.

❖ மத்திய அரசானது, மாநில அரசுகளின் ஆலோசனையோடு ஒரு தேசியப் போக்குவரத்துக் கொள்கையை வடிவமைக்கலாம்.

❖ இந்த மசோதா மத்திய அரசால் ஒரு அறிவிக்கையின் மூலமாக தேசிய சாலைப் பாதுகாப்பு வாரியத்தை அமைத்திட கூறுகின்றது.

❖ இந்த மசோதா போக்குவரத்து மரணங்களுக்காக ஒரு வாகன ஓட்டியுடன் தொடர்பு மேற்கொள்ள பயணிகளால் பயன்படுத்தப் படக்கூடிய டிஜிட்டல் இடைத் தரகர்கள் அல்லது சந்தை வளாகங்களைத் திரட்டு நிறுவனங்கள் என வரையறுக்கின்றது. (வாடகை மோட்டார் வண்டி சேவைகள்).




❖ இந்தத் திரட்டு நிறுவனங்களுக்கு மாநிலத்தால் உரிமங்கள் வழங்கப்படும்.

❖ மேலும் அவர்கள் 2000 ஆம் ஆண்டின் தகவல் தொழில்நுட்பச் சட்டத்துடன் ஒத்துப் போக வேண்டும்.

❖ இந்த மசோதா நிறைய விதி மீறல்களுக்காக இச்சட்டத்தின் கீழ் அபராதங்களின் அளவை அதிகரிக்கின்றது.

❖ உதாரணமாக, ஆல்கஹால் அல்லது போதைப் பொருள் ஆகியவற்றை உட்கொண்டு விட்டு வாகனம் ஓட்டினால் அதற்கான அதிகபட்ச அபராதம் ரூ 2,000 முதல் ரூ 10,000 வரை உயர்த்தப்பட்டுள்ளது.

- ஒருவேளை வாகன உற்பத்தியாளர் வாகன உற்பத்திக்கான தரங்களுடன் ஒத்துப் போகாத சமயத்தில், 100 கோடி ரூபாய் வரையிலான அபராதமோ அல்லது ஒரு வருட சிறைத் தண்டனையோ அல்லது இரண்டும் சேர்ந்தோ அபராதமாக விதிக்கப்படும்.
- ஒரு வேளை ஒப்பந்ததாரர் சாலை வடிவமைப்புத் தரங்களுடன் ஒத்துப் போகாத சமயத்தில் அபராதமானது ஒரு லட்ச ரூபாய் வரையில் விதிக்கப்படும்.
- மத்திய அரசானது இச்சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட அபராதங்களை ஒவ்வொரு வருடமும் 10 சதவிகிதம் அளவிற்கு உயர்த்திட முடியும்.

# முக்கிய தினங்கள்


## சர்வதேச இளைஞர் தினம் – ஆகஸ்டு 12

- 1999 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் ஆகஸ்டு 12ம் தேதி சர்வதேச இளைஞர் தினமாக தேர்ந்தெடுக்கப்பட்டது.
- முதல் சர்வதேச இளைஞர் தினம் 2000 ஆம் ஆண்டு ஆகஸ்டு 12 அன்று அனுசரிக்கப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டு கருத்துரு, “கல்வியை உருமாற்றுதல்”




## தேசிய நூலகவியலாளர் தினம் – ஆகஸ்டு 12

- இந்தியாவில் சியாலி ராமாமிர்த ரங்கநாதன் நூலக அறிவியல், ஆவணமாக்கல் மற்றும் தகவல் அறிவியல் ஆகியவற்றின் தந்தையாகக் கருதப்படுகின்றார்.
- இவர் தஞ்சாவூரின் சீர்காழியில் 1892 ஆம் ஆண்டு ஆகஸ்டு 09ம் தேதி பிறந்தார்.
- இவரது பிறந்த தினம் ஒவ்வொரு வருடமும் இந்தியாவில் தேசிய நூலகவியலாளர் தினமாக அனுசரிக்கப்படுகின்றது.
- இவரது வாழ்நாளின் போது ஒரு தொடராக வெளியிடப்பட்ட இவரது சுயசரிதை “ஒரு நூலகவியலாளர் திரும்பிப் பார்க்கின்றார்” என்ற தலைப்பில் அமைந்திருக்கின்றது.
- மேலும் இவர் “நூலக அறிவியலின் ஐந்து விதிகள்” என்ற புத்தகத்தையும் எழுதியுள்ளார்.




## சர்வதேச இடது கையாளர்கள் தினம் – ஆகஸ்டு 13


- ஆகஸ்டு 13ம் தேதியன்று ஆண்டுதோறும் சர்வதேச இடது கையாளர் தினம் ஒரு சர்வதேச தினமாக அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினம் 1976ம் ஆண்டு முதல்முறையாக, சர்வதேச இடதுகையாளர்கள் சங்கத்தின் நிறுவனர் டீன் R. கேம்ப்பெல் என்பவரால் அனுசரிக்கப்பட்டது.




## உலக உடல் உறுப்பு தான தினம் – ஆகஸ்ட் 13

- உடல் உறுப்பு தான தினம் ஆகஸ்ட் 13 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்தியாவில் 2010 ஆம் ஆண்டு முதல் நவம்பர் 27ம் தேதியும் உடல் உறுப்பு தான தினமாக அனுசரிக்கப்படுகின்றது.
- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் 2010 ஆம் ஆண்டு புது தில்லியில் உலகின் 6வதும் இந்தியாவின் முதலாவதுமான உடல் உறுப்பு தான தினத்தையும் உடல் உறுப்பு தான மாநாட்டையும் துவக்கியது.
- தொடர்ந்து 4-வது ஆண்டாக உடல் உறுப்பு தானத்தில் சிறந்த திறன் கொண்ட


மாநிலமாக தமிழ்நாடு விருது அளிக்கப்பட்டிருக்கின்றது.



**Organ donation in Tamil Nadu***

Total organs ...... 6,886 *(FROM 2008-TILL DATE)

| Number of donors | 1,198 | Total of major organs | 4,131 |
|---|---|---|---|
| Heart | 467 | Heart valves | 779 |
| Lungs | 353 | Corneas | 1,816 |
| Liver | 1,113 | Skin | 109 |
| Kidneys | 2,165 | Blood vessels | 2 |
| Pancreas | 26 | Bone | 26 |
| Small bowel | 4 | Spinal bone and disc tissue | 21 |
| Stomach | 1 | | |
| Hands | 2 | Abdominal flap | 2 |




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★